1994 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு கேள்விகள் தான்.

திரு. கே.கே. சின்னப்பன் : நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குக் கூட வாய்ப்பு இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் பற்றி (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சாவூர் மிட்டா மிராசுதார்கள் பற்றிதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

(ஆ) மதுரை நகரில் மின் அழுத்தம் குறைந்து அடிக்கடி மின் வெட்டு ஏற்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ. எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஓ.எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மதுரை நகரில் அடிக்கடி மின் அழுத்தம் குறைந்து, மின்வெட்டு ஏற்படுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

கடந்த 25—3—1994 அன்று பசுமலை துணை மின் நிலையத்திலுள்ள ஒரு 80 எம்.வி.ஏ. 230/110 கே.வி. மின் மாற்றி (Auto Transformer) பழுதடைந்த

காரணத்தால் அனுப்பானடி துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் பெறும் பகுதிகள் காரைக்குடி 230/110 கே.வி. துணை மின் நிலையத்திற்கு தாற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக மதுரை மாநகரின் சில பகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் நிலவுகிறது. மேற்கண்ட பழுதடைந்த மின்மாற்றி செப்பனிடப்பட்டு இயக்கத்திற்கு கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஓ.எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப்பார்த்தேன். மதுரை மாநகரிலே பொது மக்களுக்கும், விவசாயப் பெருமக்களுக்கும், சிறு தொழில் செய்பவர்களுக்கும் மிகவும் கஷ்டம் கொடுக்கக்கூடிய அளவுக்கு குறைந்த மின் அழுத்தம் ஏற்படுவதால், அடிக்கடி மின் வெட்டு ஏற்படுகிறது. இந்த அறிக்கையில் பசுமலை துணை மின் நிலையத்திலுள்ள மின் மாற்றி பழுதடைந்த காரணத்தால் இந்த மின்வெட்டு ஏற்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்படி அந்த மின்மாற்றி பழுதடைந்த காரணத்தினாலே ஏற்படுவதாக இருந்தால் அந்த மின்மாற்றி எப்போது சீரமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25—3—1994 அன்று பசுமலை துணை மின் நிலையத்தில் ஒரு ஆட்டோ டிரான்ஸ்பார்மர் பழுதடைந்து விட்டது. அதற்குப் பின்னாலே காரைக்குடி 230/110 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து அந்தப் பகுதிக்கு மின் சப்ளை செய்தோம். உடனடியாக நம்முடைய மின் வாரிய அதிகாரிகள் 30 பேர் அடங்கிய ஒரு பொறியாளர்களுடைய குழு அமைத்து, இரவுப் பகலாகச் செயல்பட்டு சீர் செய்து, நேற்றைய தினம் அதைச் சீர் செய்து விட்டார்கள். இன்றிலிருந்து அந்த மின் மாற்றி செயல்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றிலிருந்து அந்தப் பிரச்சினை இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஓ.எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரில் மின் அழுத்தம் குறைந்து மின்வெட்டு ஏற்பட்ட பிரச்சினையை உடனடியாகத் தீர்த்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.